# மதிசுதாவின் வெந்து தணிந்தது காடு திரைப்படம் வெளிப்படுத்தும் ஈழத்தின் போர்க்கால வாழ்வியல்

**பிறைநிலா கிருஸ்ணராஜா**

*ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

pirainila2011@gmail.com

**அறிமுகம்**

சினிமா என்பது உலகளாவியதும், உலகின் மீது ஆழமான செல்வாக்கைச் செலுத்தும் விடயமாகவுள்ளது. மிகப் பரந்த விடயமாகக் காணப்படுகின்றது. மிக முக்கியமாக, தகவல்தொடர்பின் சக்திவாய்ந்த ஊடகமாகக் காணப்படுகின்றது. பேசும் மொழியைப் போலவே, சினிமாவும் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் அர்த்தத்தை தன்னுடன் எடுத்துச் செல்லும், சுற்றியுள்ள மற்றும் சூழப்பட்ட பொருட்களால் சுட்டப்படுவதுமாகவுள்ளது. "சினிமா" என்ற சொல்லின் வேர் தொழிநுட்பரீதியாக கிரேக்கத்திலிருந்து வந்த "kinema" என்பதிலிருந்து வந்ததாக அறியப்படுகின்றது. இது "kinema" மற்றும் "graphien" என்ற கிரேக்க சொற்களை இணைத்து உருவானதாகும். அதாவது இது இயங்கிக்கொண்டிருப்பதைக் குறிக்கிறது. பிரெஞ்சில் "cinematographe" என்ற சொல் சினிமாக்கான ஓர் மூலமாகக் குறிப்பிடப்படுகின்றது, இதனை லுமியேர் சகோதரர்கள் உருவாக்கினர். சினிமா என்பது வெறும் கலை மற்றும் தொழிநுட்பத்தின் இணைப்பாக மட்டுமல்ல, மனித வாழ்க்கையின் பரிமாணங்களை, வரலாற்றை, கலாசாரத்தை, உணர்வுகளை பிரதிபலிக்கும் சமூகச் சான்றாகவும் விளங்குகிறது. திரைப்படங்கள் தமக்குள் பல வகைகளைக் கொண்டுள்ளன. அவற்றில் முக்கியமானது 'போர்' சார்ந்த விடயங்களை, வாழ்வியலை வெளிப்படுத்தும் சினிமாவாகும். போர் சார்ந்த திரைப்படங்கள் உலகம் முழுவதும் மக்களின் வாழ்க்கையை, அரசியலை, இடர்பாடுகளைப் பதிவு செய்து வரலாற்று சாட்சிகளாக உருவாகியுள்ளன. போர் சார் திரைப்பட வகை என்பது போரின் அனுபவங்களை மையமாகக் கொண்டது. போரின் உண்மையான சித்திரிப்பு மற்றும் வரலாற்றில் அதன் தாக்கமான பிரதிநிதித்துவம் என்பவை பற்றி பேசுகின்றது. அவை பெரும்பாலும் யதார்த்தமான ஒலி விளைவுகள், வெடிக்கும் காட்சிகள் மற்றும் பல்வேறுவகையான ஆராய்ச்சியைப் பயன்படுத்தி வரலாற்றின் நம்பத்தகுந்த மற்றும் ஆழமான அனுபவங்களைப் பார்வையாளரிடையே உருவாக்குகின்றன.

இவ்வாய்வுக் கட்டுரை இலங்கையின் வடக்கு யாழ்ப்பாணத்தில் உருவான 'வெந்து தணிந்தது காடு' (2023) திரைப்படத்தை மையமாகக் கொண்டு, போர்க்கால வாழ்வியல், மொழி, கலாசாரம், சமூக நினைவுகள் ஆகியவை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதை ஆய்வுக்குட்படுத்துகிறது. இயக்குநர் மதிசுதாவின் இத்திரைப்படம், ஈழத்திலிருந்து வெளியான முழுநீள திரைப்படமாகவும், iPhone கைபேசியின் புகைப்படக்கருவி மூலமாக எடுக்கப்பட்ட தனித்துவமான வெளிப்பாடாகவும் விளங்குகிறது. வசனங்கள், காட்சியமைப்புகள், இசை மற்றும் கலைத்தன்மைகள் போரின் கொடுமையையும் மக்களின் அனுபவங்களையும் வெளிக்கொணர்கின்றன. சந்தைப்படுத்தல் சிக்கல்களை எதிர்கொண்ட போதிலும், இது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டது. இத்தகைய

போர் சார் வாழ்க்கைமுறை ஒன்றை வெளிப்படுத்தும் கதைக்களத்தோடு எடுக்கப்பட்டு 2023ஆம் ஆண்டு வெளியான திரைப்படம்தான் இயக்குநர் மதிசுதாவின் 'வெந்து தணிந்தது காடு'. இத் திரைப்படமானது இலங்கையின் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த முழு நீளத் திரைப்படமாகக் காணப்படுகின்றது. இத் திரைப்படமானது Crowd funding மூலம் எடுக்கப்பட்ட முதலாவது ஈழத்து திரைப்படமாகவும் iPhone கைபேசியின் புகைப்படக்கருவியால் படமாக்கப்பட்ட திரைப்படமாகவும் அமைந்துள்ளது. ஈழத்து திரைப்படங்கள் எனும் ரீதியில் இலங்கையிலிருந்து வெளியாகும் தமிழ்த் திரைப்படங்கள் அளவில் குறைவாகவே காணப்படுகின்றன. அப்படியானதொரு சூழ்நிலையில் ஈழத் தமிழரின் போர்க்கால அம்சங்களையும் இறந்தகால போர்க் கதைகளையும் கருவாகக் கொண்ட திரைப்படங்கள் என்பவை மிகச் சொற்பமானவையே. போரின் அனுபவங்களைப் பதிவு செய்த Saving Private Ryan, The Pianist, Dunkirk போன்ற திரைப்படங்கள் போலவே, இலங்கையின் உள்நாட்டுப் போரின் அனுபவங்களை வெளிப்படுத்தும் படைப்புகளும் உருவாகி வருகின்றன. எனினும், ஈழத்தின் போர்க் கதைகளை மையமாகக் கொண்ட திரைப்படங்கள் மிகக் குறைவு. அந்த நிலையில் 2023–இல் வெளிவந்த மதிசுதாவின் 'வெந்து தணிந்தது காடு' திரைப்படம், ஈழத் தமிழரின் போர்க்கால வாழ்வியலை சித்தரிக்கும் தனித்துவமான கலைப்படமாகக் கருதப்படுகிறது. இது வெறும் திரைப்படமல்லாமல், வரலாற்றின் நினைவகமாகவும், சமூக உளவியலை வெளிப்படுத்தும் சான்றாகவும் விளங்குகிறது. போரின் அனுபவங்களை சினிமா வழியாக வெளிப்படுத்திய ஆய்வுகள் உலகளவில் பல உள்ளன. உதாரணமாக, Susan Sontag தனது Regarding the Pain of Others என்ற நூலில், போரின் படங்கள் மக்கள் மனதில் எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குகிறார். ராபர்ட் ரோசன்ஸ்டோன் (Robert Rosenstone) என்பவர் வரலாற்றை திரைப்படங்கள் எவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்பதை ஆராய்ந்துள்ளார். இலங்கைச் சூழலில், உள்நாட்டுப் போர் குறித்த ஆவணப்படங்கள் உருவானாலும், கற்பனை மற்றும் கலை வடிவில் திரைப்படங்கள் குறைவானவையாகவே காணப்படுகின்றன. இதனால் 'வெந்து தணிந்தது காடு' திரைப்படம், ஈழத் தமிழரின் வரலாற்றை சினிமா வழியாகக் கூறும் பிரத்தியேக முயற்சியாக அமைகிறது.

**இலக்கிய மீளாய்வு**

1. சினிமா ஓர் ஊடகமாக அமைந்திருத்தல்.

சினிமா என்பது கலை, பொழுதுபோக்கு, அரசியல், வரலாறு மற்றும் வாழ்வியல் அனுபவங்களை ஒருங்கிணைத்து வெளிப்படுத்தும் சக்திவாய்ந்த ஊடகமாகக் கருதப்படுகிறது. Lotman (1977) சினிமாவை ஒரு "sign system" எனக் கூறுகிறார், அதாவது சினிமா ஒரு மொழி போல குறியீடுகள், காட்சிகள், ஒலி, இசை ஆகியவற்றின் வழியாக அர்த்தத்தை உருவாக்குகிறது.

அன்டர்சன் (1991) தனது "கற்பனை செய்யப்பட்ட சமூகங்கள்" என்ற நூலில், சினிமா மற்றும் இலக்கியம் போன்ற ஊடகங்கள் ஒரு சமூகத்தின் பெரும் நினைவகத்தை உருவாக்கும் வல்லமை கொண்டவை எனக் கூறுகிறார். போரின் collective memory (சமூக நினைவகம்) பெரும்பாலும் திரைப்படங்கள் வழியாகவே காட்சியளிக்கப்படுகிறது.

2. போர் மற்றும் திரைப்பட ஆய்வுகள்

போரின் அனுபவங்களைச் சித்திரிக்கும் சினிமா தனி வகை (genre) ஆக வளர்ந்துள்ளது. Elsaesser (2005) சினிமாவில் war narratives என்பவை "historical trauma"வை காட்சியமைப்பின் மூலம் வெளிப்படுத்துவதாகக் கூறுகிறார்.

ஹாலிவுட்டில் Saving Private Ryan (1998), Platoon (1986) போன்ற திரைப்படங்கள் உண்மையோடு ஒலி, காட்சி, இரத்தம், சிதைவுகள் போன்றவற்றைத் துல்லியமாக வெளிப்படுத்த முயல்கின்றன. இந்திய சினிமாவில் Border (1997), LOC Kargil (2003) போன்றவை தேசபக்தி உணர்வுடன் போரின் வீரத்தைப் பாராட்டுகின்றன. இலங்கையில் ஈழத் தமிழ் சினிமா மிகக் குறைந்த அளவிலேயே வெளியாகியிருக்கின்றன. பெரும்பாலும் சமூக நாவல்கள், ஆவணப்படங்கள், குறும்படங்கள் மூலமாகவே போரின் உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஈழத் தமிழரின் அனுபவங்களை சினிமாவில் பிரதிபலிப்பது குறித்த ஆய்வுகள் இன்னும் குறைவாகவே உள்ளன.

ஈழத் தமிழரும் போர்க்கால சினிமாவும் எனும்போது இலங்கையின் உள்நாட்டு யுத்தம் (1983–2009) தமிழ் மக்களின் வாழ்க்கையில் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்தியது. Daniel (1996) Charred Lullabies நூலில் போரின் உளவியல் தாக்கங்களைப் பதிவு செய்கிறார். போர்க்காலத்தில் தயாரிக்கப்பட்ட ஈழத் திரைப்படங்களில் சில திரைப்படங்கள் அரசியல் – அரசாங்கக் கட்டுப்பாடுகள், நிதி நெருக்கடி, சந்தை வாய்ப்புகளின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் வெளியே வரவில்லை. மதிசுதா இயக்கிய 'வெந்து தணிந்தது காடு' என்ற திரைப்படம் முக்கியமானது எனக் கருதப்படுகிறது, ஏனெனில்: இது முழுமையான யாழ்ப்பாணத் திரைப்படமாக உருவாக்கப்பட்டது. iPhone கருவியை மட்டுமே பயன்படுத்தி எடுக்கப்பட்டிருப்பது தொழில்நுட்ப ரீதியாக புதிய முயற்சி. போரின் நாளாந்த வாழ்வியல், மக்கள் நினைவுகள், பிரிவு, ஏக்கம் ஆகியவற்றை உணர்ச்சிசார் பிம்பங்களால் வெளிப்படுத்துகிறது.

**ஆய்வு முறையியல் மற்றும் கலந்துரையாடலும் ஆய்வின் பெறுபேறுகளும்**

இதனடிப்படையில் மதிசுதா இயக்கிய 'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தின் மூலமாக ஈழத்தினுடைய போர்க்கால வாழ்வியல் அம்சங்கள் வெளிக்கொண்டுவரப்படும் விதத்தினை ஒரு முறைசார் ஆய்வு நோக்கில் அடையாளப்படுத்தும் நோக்கில் அதன் உள்ளடக்கங்கள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு, இசை, காட்சியமைப்பு காட்சிச் சூழல் ஆகிய விடயங்களை இதில் இணைத்து நோக்கலாம். இவ் ஆய்வினுடைய நோக்கங்களாக 'வெந்து தணிந்தது காடு' திரைப்படத்தின் மூலம் ஈழத் தமிழரின் போர்க்கால வாழ்வியல் அம்சங்களை அடையாளப்படுத்துதல், காட்சியமைப்பு, வசனங்கள், இசை ஆகியவை எவ்வாறு போரின் அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன என்பதைப் பகுப்பாய்வு செய்தல், மொழி மற்றும் கலாசார பிரதிநிதித்துவம் திரைப்படத்தில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதை ஆராய்தல், திரைப்படத்தின் சமூக, கலை மற்றும் சர்வதேச அங்கீகாரங்களை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். இந்த ஆய்வு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை (Content Analysis) வழியாக மேற்கொள்ளப்படுகின்றது. திரைப்படத்தின் காட்சிகள் (Scenes) போர்க்கால வாழ்வியலை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைக் குறியீடுகள் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றது. வசனங்கள் (Dialogues) மொழி, உணர்ச்சி, கலாசார வெளிப்பாடு ஆகிய அம்சங்களை ஆய்வுக்குட்படுத்துவதோடு, இசை மற்றும் ஒலி போரின் உணர்ச்சியைக் கட்டியெழுப்பும் வகையில் ஆராயப்படுகின்றது. திரைப்படத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பற்றிய விமர்சனங்களும் மதிப்பீடு செய்யப்படுகின்றது. இவ்வாய்விற்கு முதல்நிலை தகவல் திரட்டும் கருவியாக குவிமையக் கலந்துரையாடல் பயன்படுத்தப்பட்டது. இதில் குறித்த திரைப்படம் பற்றிய ஆர்வம் உள்ளவர்கள், இலக்கிய ஆர்வலர்கள், குறித்த திரைப்பட இயக்குநர் போன்றோர் உள்ளடக்கப்பட்டனர். இங்கு இரண்டாம் நிலைத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் மூலங்களாக சினிமா சார்ந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாய்வின் பகுப்பாய்வில் போரின் சினிமாப் பிரதிநிதித்துவமானது திரைப்படம் முழுவதும் யதார்த்தக் காட்சிகள், இயற்கை ஒளி, எளிய காட்சியமைப்புகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சண்டைக் காட்சிகள், இடம்பெயர்வு, குடும்பத் துயரம் போன்றவை போரின் நேரடி சான்றுகளாகத் திகழ்கின்றன. வாழ்வியல் அம்சங்கள் என்பதில் அன்றாட வாழ்க்கையானது சந்தை, நிலங்கள், வீடுகள், குடும்பங்கள் போரின் தாக்கத்தால் எவ்வாறு சிதைந்தன என்பதைப் படம் காட்டுகிறது. பிரிவு மற்றும் ஏக்கம் என்பது கதாபாத்திரங்கள், பிரிவால் உண்டான மன உளைச்சல்களை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்துகின்றனவாக அமைக்கப்பட்டுள்ளன. மண்ணின் பெருமை மற்றும் ஈழத்து வாழ்வியல் என்பது இங்கு பேசப்பட்ட வசனங்களில் தமிழ்மொழியின் அழகியலை மட்டுமல்லாது, ஈழத்து வாழ்வியல் மற்றும் போர்க்கால அடையாளத்தையும் வலியுறுத்துகின்றன. மொழி மற்றும் திரைப்பட வசனங்களில் போரின் சூழ்நிலைச் சொற்கள், நாட்டுப்புற மொழி, கலாசாரப் பிணைப்புகள் இடம்பெற்றுள்ளன. இவை ஈழத் தமிழின் தனித்துவத்தையும் வரலாற்றுப் பின்னணியையும் வெளிப்படுத்துகின்றன. தொழில்நுட்பப் புதுமையபனது iPhone மூலம் எடுக்கப்பட்டிருப்பது ஓர் உலகளாவிய சினிமா முயற்சியாகக் கருதப்படுகிறது. இயற்கை ஒளி தவிர செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட போர்க்கால ஒளி, போரியல் சத்தத்துடனான காட்சிகள் ஆகியவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. இத் திரைப்படத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் அங்கீகாரமானது வணிக ரீதியாகச் சந்தை வாய்ப்புகள் குறைந்திருந்த போதிலும், சர்வதேச அளவில் கலைத் திரைப்படமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றுள்ளதோடு விருதுகளையும் பெற்றுள்ளமை முக்கியமானது. பல்வேறு வகைகளில் 32 விருதுகளை வென்றுள்ள இத் திரைப்படம் மேலும் 06 வகைகளில் ‘official selection’ என்பதிலும் உள்வாங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**ஆய்வின் முடிவு**

‘வெந்து தணிந்தது காடு’ திரைப்படம், ஈழத் தமிழரின் போர்க்கால வாழ்வியல் அனுபவங்களை சினிமா வழியாக வெளிக்கொணர்ந்த முக்கியமான சுவடியாகும். இது வெறும் கற்பனை அல்ல, வரலாற்றை கலை வடிவில் சித்திரித்த சான்றாகக் காணப்படுகின்றது. வசனங்கள், காட்சியமைப்புகள், இசை ஆகியவை போரின் உணர்ச்சிகளை ஆழமாக வெளிப்படுத்துகின்றன. சந்தைப்படுத்தல் சிக்கல்கள் இருந்தாலும், சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றிருப்பது இந்தத் திரைப்படத்தின் பெருமையாகும். ஈழத்து சினிமா வரலாற்றில் இது புதிய பாதை ஒன்றை உருவாக்குகிறது. இத் திரைப்படத்தின் வசனங்கள் தமிழ்மொழியின் அழகியல்சார் வார்த்தைகளை வெளிப்படுத்துவனவாயும், மண்ணின் பெருமையைக் கூறும் விதமாயும், ஈழத்து வாழ்வியலின் வெளிப்பாடாயும் முக்கியமாகப் போர்க்காலத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளின் பிரதிபலிப்பாயும் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் பிரிவு, ஏக்க உணர்வின் வெளிப்பாடாகவும் காணப்படுகின்றது. இத் திரைப்படத்தில் அமைக்கப்பட்ட காட்சிகள் ஒவ்வொன்றும் பொருத்தமான முறையில் ஈழத்தினுடைய வாழ்வியலையும் முக்கியமாகப் போர்க்காலத்தில் மக்களின் வாழ்வியல் முறைகள் எப்படியிருந்தன என்பதை வெளிப்படுத்துகின்றது. சந்தை வாய்ப்புக்களில் வணிக ரீதியான திரைப்படமில்லை என்கின்ற காரணத்தாலும் மற்றும் இதற்கு கிடைத்த எதிர்ப்பக்களாலும் சந்தைப்படுத்தலில் சிக்கல்கள் இருந்தாலும் சர்வதேச ரீதியாகச் சிறந்த திரைப்பட வகைக்குள் உள்வாங்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு அங்கீகாரங்களையும் பெற்றுக்கொண்டுள்ளது என்பதை ஆய்வு சுட்டுகின்றது.

**உசாத்துணைகள்**


இராமகிருஷ்ணன், எஸ். (2002). *உலக சினிமா*. உயிர்மை பதிப்பகம், சென்னை.

குமார், அ. (2012). *சினிமா ரசனை*. சொல் ஏர் பதிப்பகம், சென்னை.

சிவகுமாரன், எஸ். (2001). *அசையும் படிமங்கள்*. மீரா பதிப்பகம், கொழும்பு.

சிவத்தம்பி, கா. (2014). *தமிழ்ப் பண்பாட்டில் சினிமா*. பாவை பிரிண்டேர்ஸ், சென்னை.

தம்பிஐயா, தே. (2000). *இலங்கைத் தமிழ் சினிமாவின் கதை*. வி. எஸ். துரைராஜா, கொழும்பு.

திருநாவுக்கரசு, ப. (2004). *சொல்லப்படாத சினிமா*. நிழல் வெளியீடு, சென்னை.

திலகவதி, (2005). *உங்களுக்காக உலக சினிமா*. அம்ருதா பதிப்பகம், சென்னை.

Mahendra, W. (2024). *The evolution of historical and period films in Sri Lankan cinema.* National Institute of Education, Sri Lanka.

Sutha, M. (Director). (2023). *Venthu Thanindhathu Kaadu* [Film].